இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 149 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 24 – வியாழக்கிழமை 08 ஜனவரி 2026 – சென்னை 24+12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 149 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 24 - Thursday 08 January 2026 - Chennai 24+12 Pages ₹ 5.00

# தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம்!

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணம், ஒருசிலரின் வளர்ச்சிக்கானதல்ல. அது, நம் அனைவரின் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த பயணம். ஒட்டுமொத்த சமூக நலனுக்கான திட்டங்களை கவனமுடன் நிறைவேற்றும் ஓர் அரசாங்கத்தின் சீரிய செயல்பாடுகளுக்கு கடந்த 5 ஆண்டுகளின் சாதனைகளே சாட்சி.

பிஞ்சுக் குழந்தைகள் முதல் மூத்த குடிமக்கள் வரை, ஒவ்வொருவரின் நலனையும் கருத்தில் கொண்டே திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

பள்ளி செல்லும் குழந்தைகள் பசியாறிக் கல்வி பயிலும் மகிழ்ச்சி.

உயர்கல்வி மாணவர்கள் இணைய வசதிகளுடன் பயில்கின்ற புதுயுகத்தின் வளர்ச்சி. மதிப்பெண்களுக்காக மட்டுமன்றி, மதிப்புயர் பணிகளுக்காகவும் அவர்கள் தயார் செய்யப்படும் எழுச்சி!

முதியோர்க்கென கனிவான திட்டங்கள்.

பெண்களின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் புரட்சிகரமான முன்னெடுப்புகள்.

இல்லத்தரசிகளின் பங்களிப்பிற்கு உரிய அங்கீகாரம்.

மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தோர், விளிம்பு நிலையில் உள்ளோர், பழங்குடிச் சமூகத்தினர் - அனைவரையும் அரவணைக்கும் அரசின் ஆதரவுக் கரம்.

இவையே, ஒன்றுபட்ட வளர்ச்சி மற்றும் சமூக நீதியின் எழுச்சிக்கான ஓர் முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை முன்னிறுத்தி உள்ளன.

இணைந்து பயணிப்போம். இணைந்து உயர்ந்திடுவோம்.

**(மு.க.ஸ்டாலின்)**
**முதலமைச்சர்**
**தமிழ்நாடு**




செ.ம.தொ.இ / 16 / வரைகலை / 2026